# ஆட்டிசம் பிள்ளைகளைக் கொண்ட பெற்றோருக்கான மன அழுத்தம் – யாழ் மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**அபிராமி, சு., மேனகா.சி**
மெய்யியல்துறை (உளவியல்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
abiramy2017@gmail.com

*யாழ் மாவட்டத்தில் ஆட்டிசத்தினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளினுடைய பெற்றோர்கள் பரவலாக பல்வேறு பிரதேசங்களிலும் வசித்து வருகின்றார்கள். இவ்வாறான பெற்றோர்களிடையே பிள்ளைகளின் தனிப்பட்ட நிலைமைகள் மற்றும் சமூக ரீதியிலான அழுத்த நிலைமைகள் போன்றன மன அழுத்தத்தினை தூண்டுபவையாகவும் அதிகரிப்பவையாகவும் காணப்படுகின்றன. இவ்வாறு இருக்கையில் பெற்றோர்கள் எதிர்நோக்குகின்ற மன அழுத்தத்தினை அளவிடல் மற்றும் அதற்குரிய காரணிகளைக் கண்டறிதலினை பிரதான நோக்காகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் முதல்நிலைத் தரவுகள் பனிப்பந்து மாதிரியெடுப்பு முறை மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டது. இதன் அடிப்படையில் 79 மாதிரிகளிடம் இருந்து வினாக்கொத்து மற்றும் நேர்காணல் முறைகளின் ஊடாக தரவுகள் சேகரிக்கப்பட்டது. இதனடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தரவுப்பகுப்பாய்வானது SPSS மென்பொருளைப் பயன்படுத்தி T Test, ANOVA, Correlation போன்றன மூலம் பெறப்பட்ட முடிவுகளானது விபரிக்கப்பட்டன. பெறப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் ஆட்டிசம் பிள்ளைகளைக் கொண்ட ஆண்பிள்ளைகளின் பெற்றோர்களை விட பெண் பிள்ளைகளின் பெற்றோர் அதிகம் மன அழுத்திற்கு உள்ளாகுவதாகவும், பெற்றோர்களில் அதிகளவிலானோர் மன அழுத்தத்திற்கு உள்ளாகுவதாகவும், பெற்றோர்களின் பால் வேறுபாட்டிற்கும் மன அழுத்த அளவிற்கும் தொடர்புகள் காணப்படவில்லை என்பதும், ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பான விடயங்கள் பெற்றோருக்கான மனஅழுத்தத்தில் தாக்கம் செலுத்துகின்றது மற்றும் பிள்ளைகளின் சமூக நடத்தை, தொடர்பாடல், சமூக விருத்தி எதிர்காலம் மற்றும் கோபம், சுயதீங்கினை ஏற்படுத்தும் நடத்தை தொடர்பான விடயங்கள் போன்றன பெற்றோர்களிடத்தில் அதிகமாக மன அழுத்தத்தினை ஏற்படுத்துவதாகவும் பெற்றோரின் தொழில் நிலைமை மற்றும் மனஅழுத்தத்திற்கிடையே தொடர்புகள் காணப்படவில்லை போன்றன முடிவுகளாகக் கண்டறியப்பட்டுள்ளன. குறித்த காரணங்களினால் பெற்றோர்களுக்கு ஏற்படும் அதீத மன அழுத்தத்தினை குறைப்பதற்கு தொடர்புடைய தரப்புக்களான பெற்றோர்களும் சமூகமும் விழிப்புணர்விற்குட்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.*

**திறவுச் சொற்கள் :** ஆட்டிசம், ஆட்டிசம் பிள்ளைகளின் பெற்றோர், மன அழுத்தம்